2008 ஏப்ரல் 10]

திரு. ஓ. பன்னீர்செல்வம்: Complete-ஆக எடுத்துவிடுங்கள், பூராவையும்; அவைக் குறிப்பிலிருந்து எடுங்கள்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எடுத்தாகிவிட்டது.

வினா எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

85—

பயிற்சி மையங்கள்

***665—திரு. ஆர். ஞானதாஸ்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக இளைஞர்களை விளையாட்டுத் துறையில் மேன்மையடையச் செய்ய தமிழகத்தில் தேசிய விளையாட்டுப் பயிற்சி மையங்கள் உள்ளனவா?

(ஆ) இல்லையெனில், பயிற்சி மையங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தப்பட்ட விடையைத் தங்களுடைய அனுமதியோடு இந்த அவைக்கு அளிக்கிறேன் :

(அ) மற்றும் (ஆ) ஆம். தேசிய விளையாட்டுப் பயிற்சி மையங்களைப் பொறுத்தவரை, இந்திய விளையாட்டுக் குழுமத்தால்--S.A.I.—பயிற்சி மையம்மூலமாகக் கீழ்க்கண்ட இடங்களில் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

ஆண்களுக்காக, சென்னை, நேரு விளையாட்டரங்கத்திலும், சேலம், மகாத்மா காந்தி விளையாட்டரங்கத்திலும், பெண்களுக்காக, சென்னை, நேரு பூங்காவிலும் பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Hockey, Foot ball, Volley ball போன்ற விளையாட்டுகளில் தமிழகத்தின் வீரர்கள் தேசிய அளவிலும், உலக அளவிலும் பங்கேற்று, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்தனர். தற்போது அந்த நிலைமை சற்றுக் குறைந்து வருகிறது. நமது இளைஞர்களிடையே, குறிப்பாகக் கிராமப்புற இளைஞர்களிடையே போதிய திறமைகள் இருந்தும், தேவையான பயிற்சியும், பயிற்சி நுணுக்கங்களும் அவர்களுக்குக் கிடைக்காததால், விளையாட்டிலே அவர்களுக்குப் போதிய வாய்ப்புகள் இல்லாத நிலை உள்ளது. மேலும், பயிற்சி நுணுக்கங்கள் 40 ஆண்டுகளுக்கு முன்பிருந்த பழமையானவையாக இருக்கின்றன. எனவே, அந்தப் பழமையான நுணுக்கங்களைக் களைந்து, புதிய நுணுக்கங்களைப் புகுத்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மூலக் கேள்வியில், தமிழக இளைஞர்களை விளையாட்டுத் துறையில் மேன்மையடையச் செய்ய, தமிழகத்தில் தேசிய விளையாட்டுப் பயிற்சி மையங்கள் உள்ளனவா என்றுதான் கேட்கப்பட்டிருந்தது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் நல்ல பயிற்சி பெற, வெற்றி பெற விளையாட்டு நுணுக்கங்களை இந்த அரசு புகுத்துமா என்று கேட்டிருக்கிறார்கள். இந்த அரசு, அதற்காக ஆர்வத்தோடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

திரு. கு. ஹசன் அலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இறகுப் பந்து விளையாட்டிற்கென்று ஒரு பயிற்சியாளர்

2008 ஏப்ரல் 10]

உள்ளார். அவர் இராமநாதபுரத்திலேதான் பணியாற்றுகிறார். மற்ற மாவட்டங்களைவிட எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டம், Shuttle cock விளையாட்டில் எல்லாவிதத்திலும் சிறப்பாக அமைந்துள்ளது. அடிப்படை வசதிகளும் அங்கே இருக்கின்றன. எனவே, இந்த விளையாட்டிற்கான Sports Academy ஒன்றை இராமநாதபுரத்தில் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறகுப் பந்து விளையாட்டைப் பொறுத்த அளவில், இப்பொழுது அதி நவீன விளையாட்டாக மாறிக் கொண்டிருக்கிறது. உடற்பயிற்சியினுடைய மிக எளிதான விளையாட்டாக இந்த இறகுப் பந்து விளையாட்டு அமைந்திருக்கிறது. கிட்டத்தட்ட, தமிழ்நாட்டிலே எல்லாப் பகுதிகளிலும், எல்லா விளையாட்டு மைதானங்களிலும் இது இருக்கிறது. எல்லோரும் இதை உபயோகப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். முகவை மாவட்டத்திலும் அதற்கான வாய்ப்புகள் இருந்தாலும்கூட, அதற்காகத் தனியாக அமைக்க வேண்டிய அவசியமில்லை. ஏற்கெனவே அங்கே பயிற்சியாளர்கள் இருக்கிறார்கள். இந்தப் பயிற்சியையும் தொடர்ந்து தமிழ்நாடெங்கும் கொடுப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. கூடிய வரையில் வெளி விளையாட்டு அரங்கத்தில் விளையாடக்கூடிய இந்த விளையாட்டை, உள் விளையாட்டு அரங்கத்திலேயே விளையாடுவதற்கான வாய்ப்புகளை உருவாக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி, பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கிடையே Inter-State விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அதுபோல, நமது மாநிலத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், பிற மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களும் விளையாடுகின்ற வகையில், விளையாட்டை அறிமுகப்படுத்துகிற ஒரு உத்தியை, நமது துறை அறிமுகப்படுத்துமா; அதற்கு அமைச்சர் அவர்கள்

தலைமை ஏற்பார்களா; அந்த விளையாட்டை நாமக்கல்லில் நடத்துவதற்கு உதவி செய்வாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கிடையே நடக்கின்ற போட்டியில் தீர்ப்புச் சொல்வதும், தலைமை தாங்குவதும் அவைத் தலைவர்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். ஏற்கெனவே இது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும், அதே நேரத்தில் வேறு மாநிலங்களோடு போட்டி போட விரும்புகிற மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களுடைய ஆர்வத்தைப் பாராட்டுவதோடு, முதலிலே இங்கே விளையாடி முடித்துவிட்டு, பின்னர் வேறு மாநிலங்களுக்குச் செல்லலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

86—

மலைப் பாதை

***42801—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஏலகிரி மலைப் பாதையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டத்தில், ஏலகிரி மலைப் பாதையானது, திருப்பத்தூர் வனக் கோட்டத்தைச் சார்ந்த பொன்னேரி, ஜோலார்பேட்டை காப்புக் காடுகள் வழியாக, அத்தனாவூர் என்ற கிராமத்திற்குச் செல்லுகிறது.